# <u>பத்திரிக்கை செய்தி</u>

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலுகா, கங்கதேவன் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த சம்பத் மகன் ராஜ்குமார் என்பவர் அவருக்கு உரிமையான நிலத்திற்கு ஆன்லைன் மூலமாக தனிப்பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தினை பரிந்துரை செய்ய கங்காதவன் குப்பம் கிராம நிர்வாக அலுவலர் திரு.பாலு மற்றும் கிராம உதவியாளர் திருமதி. பொன்னியம்மாள் ஆகியோர் ரூ.40,000 லஞ்சம் பணம் கேட்டுள்ளனர். இது சம்பந்தமாக இன்று (17.7.2023) ராஜ்குமார் செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் அளித்ததின் பேரில், வழக்கு பதிவு செய்து பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொண்டனர். இதில் முதல் தவணை லஞ்ச பணம் ரூ. 5000/- ஐ விஏஓ பாலு, பொன்னியம்மாள், கிராம உதவியாளர் ஆகியோர் வாதி ராஜ்குமார் இடமிருந்து லஞ்சமாக வாங்கும்போது பிடிபட்டனர். எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.